உ

திருச்சிற்றம்பலம்

# அடுக்குநிலைபோதம்

இஃது

கோகுலாபுரம்

அருணாசலமுதலியாரால்

பரிசோதித்து

திருப்பதி

இரத்தினமுதலியார்

அவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1887-௵

உ

திருச்சிற்றம்பலம்.

# அடுக்குநிலைபோதம்

## நூல்

சொல்லிறந்தவிடமெங்கேமுப்பாழெங்கே
துவாரபாலகரெங்கேமுத்ற்பாழெங்கே
நல்லசங்குருதியெங்கே வைகுந்தமெங்கே
நாரணனும்ஆலிலைமேல்படுத்ததெங்கே
அல்லல்படும்ஐம்பூதமொடுக்கமெங்கே
ஆமஞ்சுயிதழ்வெண்டுமுளைத்ததெங்கே
சொல்லவல்லாருண்டானலைவனாநாமும்
தொழுதுகுருவெனப்பணிந்து வணங்கலாமே

உந்தியெனுநிலையெங்கே அறுகோணமெங்கே
ஓங்காரநிலையெங்கே வுற்றவிடமுமெங்கே
மந்திரமுஞ்சாத்திரமும்பிறந்ததெங்கே
மறைநாலும்விரித்தவயன்தானுமெங்கே
மூர்த்திவருகணபதியும்பிறந்ததெங்கே
மூக்கோணமூலையெங்கேயடிதானெங்கே
இந்தவகைபொருளறிந்துசொல்வார்தம்மை
யிறையவனென்றேகருதியியம்பலாமே உ

ஈற்பதத்திபொங்கிவரும்வழிதானெங்கே
பரிந்துமுறைகொண்டுநின்ற அறிவுமெங்கே
உற்பனமாங்கருநின்றுவிளைந்ததெங்கே
யொருபாதந்தாக்கிநின்றவடையாளமெங்கே
தற்பரமாயாகிநின்றநிலைதானெங்கே
சர்வவுயிராயெடுத்தசிவனுமெங்கே
இப்பொருளையறிந்துரைகூரும்பெரியோர்தம்மை
இறையவனென்றேகருதியியம்பலாமே ௩

அடிமுடி யுகவோனநிலையுமெங்கே
அறுசுவையுங் கொண்டொளித்த விடமுமெங்கே
வடிவான வைந்தலைமாணிக்கமெங்கே
வரையான வூமையெனுமெழுத்துமெங்கே
இடமாக ஆடிநின்றபாதமெங்கே
இச்சையுடன்பேசிநின்றவெழுத்துமெங்கே
அடைவாய்ப்பொருளறிந்துசொல்வார்தம்மை
யடிதொழுதுகுருவென்றுநம்பலாமே ௬

சற்குருவுஞ்சந்நிதியுமானதெங்கே
சாகாதகாலெங்கேவேகாத்தலையுமெங்கே
முப்பொருளுமொருபொருளாய்நின்றதெங்கே
மூளையெங்கேதலையெங்கேமுகமுமெங்கே
நற்கமலமாயிரதொட்டிசமுமெங்கே
நாலுகையொருபாதமானதெங்கே
இப்பொருளையறிந்துரைக்கும்பெரியோர்தம்மை
யிறையவனென்றேகருதியிம்பலாமே ௭

நஞ்சணிந்தாசன்முகந்தானைந்துமெங்கே
ஞானக்கண்மற்றக்கண்மூன்றுமெங்கே
அஞ்சவுயிர்தனைக்கொடுக்கும்யமனெங்கே
ஆயிரக்கண்ணிந்திரனாதாமுமெங்கே
பஞ்சறிவாய்நின்றபராசத்தியெங்கே
மதிறலுலோகமெனுமதுதானெங்கே
அஞ்சமறப்பொருளறிந்துசொல்வாராகில்
வணங்கிகுருபரனென்றுவாழ்த்தலாமே

வகைபிறந்தவிடமெங்கேகோபமெங்கே
நரகமேழாநரகமானதெங்கே
திகைத்துமறந்திடமெங்கேநினைப்புமெங்கே
தீராதகுறைவந்துசூழ்ந்ததெங்கே
பகைத்தவிடந்தானெங்கேஒழுக்கமெங்கே
பகலிறவுயிருந்தவிடந்தானுமெங்கே
வகைப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
வணங்கிகுருபரனென்றுவாழ்த்தலாமே ௬

## அடுக்குநிலைபோதம்

ஆறுகால்முகமாறுமானதெங்கே
அறுபத்துநாலுகலைநின்றதெங்கே
சீறுகால்பணிரெண்டிற்கழிந்ததெங்கே
செத்திடமுஞ்சாகாதிருந்திடமுமெங்கே
பூருவநீயிருந்துவந்துபிறந்திடந்தானெங்கே
புந்திதனிலன்பத்தோரட்சரமுமெங்கே
வேறுபொருளுரையாதுள்ளபடியேசொல்வார்
மெல்லடியிலேபணிந்துமெல்லியலாமே

ஆதிகதிற்சந்திரனும்பிறந்ததெங்கே
அவரொடுங்கிநிற்குமதுவிடமுமெங்கே
சாதியலவொன்றாகக்கண்டதெங்கே
சத்திசிவமென்றுபிரியாததெங்கே
ஓதியுணர்ந்தேலுசைமறந்ததெங்கே
வுச்சிட்டவிட்டத்தவிடமுமெங்கே
சோதிபோல்ஞானமொழிபெற்றபேர்கள்
சொல்லியதெல்லாமுடலிற்சொல்லுவாயே

இருள்பிறந்தவிடமெங்கேஒடுங்கிடமுமெங்கே
யிரண்டுதிருசசங்குநின்றவிடமுமெங்கே
அருள்பிறந்துபாடிநின்றவிடமுமெஙகே
அறுத்தடைந்தவாசலொன்றுகண்டதெங்கே
திருபிறந்தவிடமெங்கேஎழுகிணறுமெங்கே
திருக்கிணத்தையெறைக்கின்றவுத்தமெங்கே
விருப்பமுடனடுக்குநிலைபோதகத்தை
விளம்பினேனெஞ்ஞானஅறிவுளோர்க்கே ௰

அடுக்குநிலைபோதம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்